**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

## DEPOSITION OF WITNESS

**CC.No. 382/2023**

PW-5

| | | | |
|---|---|---|---|
| Name | சிவக்குமார்(PW5) | | |
| Father's Name | முருகன் | தொழில் | |
| Village | காளியப்பம்பாளையம் | | |
| Taluk | நம்பியூர் | Age | 29 |
| District | ஈரோடு | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 18th **day of May 2026** by Thiru. K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused A2 Present, A1 absent. Petition filed and allowed)*

**முதல் விசாரணை:-**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு சயின்ஸ் ஸ்கொயர் எலக்ட்ரானிக்ஸ் கடை வைத்து சிசிடிவி கேமராவில் சேல்ஸ் மட்டும் சர்வீஸ் வேலை செய்து வருகிறேன். கடந்த 24.08.2023ம் தேதியன்று பெருமாநல்லூர் காவல் ஆய்வாளர் என்னுடைய கடைக்கு வந்து செயின் ஸ்னாட்சிங் வழக்கின் சிசிடிவி பதிவுகளை பதிவிறக்கம் செய்ய வேண்டும் என்று கேட்டார். நான் ஈட்டி வீரம்பாளையம் பஞ்சாயத் அலுவலகத்திற்கு சென்று அங்குள்ள DVR பதிவில் உள்ள வீடியோக்களை பார்த்த பின்பு காவல் ஆய்வாளர் என்னிடம் பதிவிறக்கம் செய்ய சொன்ன பதிவுகளை மட்டும் அவர் கொண்டு வந்த பென் டிரைவில் காப்பி செய்து கொடுத்தேன். பின்பு கருமத்தம்பட்டி யில் உள்ள விநாயகா டிபார்ட்மென்ட் ஸ்டோர்ஸ் கடையில் உள்ள சிசிடிவி கேமராவின் பதிவுகளை அங்குள்ள DVR ல் இருந்து காவல் ஆய்வாளர் என்னிடம் பதிவிறக்கம் செய்ய பதிவுகளை மட்டும் அந்த இடத்தில் வைத்து காவல் ஆய்வாளர் கொண்டு வந்த பெண் டிரைவில் பதிவிறக்கம் செய்து கொடுத்தேன். பதிவிறக்கம் செய்த மறுநாள் அந்த பென் டிரைவில் காப்பி செய்த பதிவுகள் ஒரு சிலவற்றை காவல் ஆய்வாளர் என்னிடம் காண்பித்தவைகளை நான் புகைப்படம் ஆக என்னுடைய கணினியில் போட்டு, பிரிண்ட் செய்து கொடுத்தேன். நான் பதிவிறக்கம் செய்து கொடுத்தும் மாற்றி கொடுத்ததால் அந்த பதிவுகளுக்கு உண்டான 65b சான்றிதழை வழங்கினேன். என்னிடம் காட்டப்படும் சான்றிதழில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த 65b சான்றிதழ் **(அ.சா.ஆ.11)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்பு எதிரிகளை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. சிசிடிவி பதிவுகளை ஆய்வு செய்வதற்கான படிப்புகளை நான் படித்து உள்ளேனா என்றால் படித்துள்ளேன். சிசிடிவி பதிவுகளை ஆய்வு செய்வதற்காக எழுத்து மூலமாக வேண்டுகோள் கடிதம் எனக்கு கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. என்னுடைய கடைக்கும் காவல் நிலையத்திற்கும் சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரம் இருக்கும். நான் இதே போல் வேறு வழக்குகளுக்கு சான்றிதழ் கொடுத்துள்ளேன் என்றால் இல்லை இதுதான் முதல் முறை. 65b சான்றிதழை பற்றி எனக்கு காவல்துறையினர் சொன்ன பின்பு தான் தெரியும் என்றால் இல்லை. நான் என்னுடைய கடையின் கணினியில் வைத்து பிரிண்ட் அவுட் எடுத்துக் கொடுத்ததாக போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. பஞ்சாயத் அலுவலகத்தில் காவல்துறையினர் எனக்கு அனுமதி வாங்கி கொடுத்த பின்பு தான் நான் பதிவிறக்கம் செய்தேன். 65b சான்றிதழில் எந்த பென் டிரைவில் காப்பி செய்து கொடுத்தேன் என்ற வாசகம் இடம் பெறவில்லை என்றால் சரிதான். நான் அன்றைய தினம் காவல்துறையினருடன் எவ்வளவு மணி நேரம் இருந்திருப்பேன் என்றால் அரை நாள் இருந்திருப்பேன். நான் சொந்தமாக கடை வைத்துள்ளேன் அல்லது அந்த நிறுவனத்தில் பணி புரிகிறேனா என்றால் சொந்தமாக கடை வைத்துள்ளேன். 65b சான்றிதழில் என்னுடைய கடையில் முத்திரை வைக்கப்படவில்லை என்றால் சரிதான். நான் மொத்தம் பத்து புகைப்படங்களை எடுத்துக் கொடுத்தேன். புகார்தாரர் ஈஸ்வரியை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஈஸ்வரியின் மகன் இளங்கோவனை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நானும் ஈஸ்வரியின் மகன் இளங்கோவனும் நண்பர்கள் என்றும் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நான் இவ்வலத்தில் போய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.சொன்ன தேதியின் சொன்ன நேரத்தில் நான் எந்த ஒரு பதிவுகளையும் பதிவிறக்கம் செய்யவில்லை என்றும் நான் இவ்வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய கணினியின் பெயரை 65 பி சான்றிதழில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

**மறுவிசாரணைஇல்லை:**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |